# சாதிவாரிக் கணக்கெடுப்பு!

## பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையடுத்து பிரதமருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை,ஜூன் 28-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தியாவில் சாதிவாரி மக்கள் தொகைக் கணக்கெடுப்பை உடனடியாகத் தொடங்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு நேற்று முன்தினம் (26-6-2024) கடிதம் எழுதியுள்ளார்.**

**ஏற்கனவே எழுதியுள்ள கடிதம்!**

அக்கடிதத்தில், இந்தியாவில் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை உடனடியாக தொடங்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டியும், தாம் இதுகுறித்து ஏற்கெனவே 20.10.2023 அன்று கடிதம் எழுதியிருந்ததை குறிப்பிட்டு, அதில் சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்புடன் பத்தாண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பை ஒருங்கிணைத்து மேற்கொள்ளவேண்டும் என்று வலியுறுத்தியிருந்ததையும் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அரசியலமைப்பின் ஏழாவது அட்டவணையின் பதிவு-69 இல் "மக்கள் தொகை கணக்கெடுப்பு" ஒன்றிய அரசின் பட்டியலில் உள்ளதையும், மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடவடிக்கைகள், மக்கள் தொகை கணக்கெடுப்பு சட்டம், 1948-இல் உள்ள விதிகளின்படி நடத்தப்படுவதையும், தற்போது, பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினரின் சாதிவாரியான மற்றும் பழங்குடி வாரியான தரவுகள் மட்டுமே மக்கள் தொகை கணக்கெடுப்புச் சட்டம், 1948-இன் கீழ் கணக்கிடப்படுவதையும் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



**சாதி அடிப்படையிலான சமூகப் பொருளாதார கணக்கெடுப்பு!**

நமது நாடு வளரும் நாடு என்ற முறையில், வளர்ச்சியின் பலன்கள் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரை யும், குறிப்பாக விளிம்பு நிலையில் உள்ள மக்களைச் சென்றடைய வேண்டும் என்று தாம் கருதுவதாகவும், பின்தங்கிய மக்களின் சமூகப் பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்டு கொள்கைகளை வகுப்பதற்கும், மக்கள் தொகை கணக்கெடுப்புத் தரவுகள் எப்போதும் அடிப்படையாக இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்தியா போன்ற ஒரு நாட்டில், சமூகச் சூழல் என்பது பல்வேறு சமூகங்களின் பொருளாதார முன்னேற்றத்தில் முக்கியப் பங்கு வகிப்பதைக் குறிப்பிட்டுள்ளார். சமூக முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளை வரலாற்று ரீதியாக நிர்ணயிக்கும் முக்கிய காரணியாக சாதி இருந்து வருவதால், சாதி அடிப்படையிலான சமூகப் பொருளாதார கணக்கெடுப்பு தரவுகள் பொதுக்களத்தில் கிடைக்கச்செய்வது அவசியம் என்றும் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

**தீர்ப்புகளில் வலியுறுத்தல்!**

மேலும், பத்தாண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படும் மக்கள் தொகை கணக்கெடுப்பு அறிக்கையிலிருந்து பெறப்பட்ட சரிபார்க்கக்கூடிய சமூகப் பொருளாதார குறியீடுகளின் அடிப்படையில் சட்டங்கள் இயற்றப்படும்போது, அவை சட்டப்பூர்வமாக செல்லுபடியாகும் தன்மையைப் பெறும்.

ஆயினும், 1931-இல் இந்தியாவில் நடத்தப்பட்ட சாதிவாரி கணக்கெடுப்புக்குப் பிறகு சமகாலத் தரவுகள் எதுவும் கிடைக்கவில்லை என்றும், பிற்படுத்தப் பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரை வகைப்படுத்துவதற்கான உச்சநீதிமன்றத்தின் பல தீர்ப்புகளில், மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் உள்ள பல்வேறு சாதிகள், சமூகங்கள் மற்றும் பழங்குடியினரின் சமூகப் பொருளாதார மற்றும் கல்வி நிலை தொடர்பான அளவிடக்கூடிய தரவுகளின் தேவை வலியுறுத்தப்பட்டுள்ளது என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுட்டிக்காட்டி யுள்ளார்.

**சட்டப்பேரவைத் தீர்மானம் இணைப்பு!**

எனவே, மேற்குறிப்பிட்ட அனைத்தையும் கருத்தில் கொண்டு, சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை தேசிய பத்தாண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புடன் ஒருங்கிணைத்து, மக்கள் தொகை கணக்கெடுப்பு பணிகளை உடனடியாக தொடங்க வேண்டும் என ஒன்றிய அரசை தாம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்வதுடன், இது தொடர்பாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நேற்று (26-6-2024) ஒருமனதாக தீர்மானம் நிறை வேற்றப்பட்டதையும் குறிப்பிட்டு, தீர்மானத்தின் நகலை இணைத்து அனுப்பியுள்ளதாகவும், இதுகுறித்து இந்தியப் பிரதமர் அவர்கள் தனிப்பட்ட முறையில் தலையிட்டு நிறைவேற்றுவார் என்று தாம் எதிர்நோக்குவதாகவும் தம்முடைய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

---

தொகுதி மேம்பாட்டு நிதியான 3 கோடி ரூபாய் முழுவதையும்

## சட்டமன்ற உறுப்பினர்கள் விரும்பும் - தொகுதியின் நலப்பணிகளுக்குச் செலவிட்டுக் கொள்ள முதல்வர் அனுமதி!

### சட்டப்பேரவையில் அவை முன்னவர் துரைமுருகன் அறிவிப்பு!

**சென்னை, ஜூன் 28 -**

**சட்டப்பேரவையில் நேற்று முன்தினம், எம்.எல்.ஏ.க்கள் தொகுதி மேம்பாட்டு நிதி உள்ளிட்ட மானியக் கோரிக்கைக்குப் பதிலளித்த அவை முன்னவர் துரைமுருகன் அவர்கள், "சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களின் தொகுதி மேம்பாட்டு நிதி 3 கோடி ரூபாய் முழுவதையும், சட்டமன்ற உறுப்பினர்கள் தாங்கள் விரும்பும் மக்கள் நலப் பணிகளுக்குச் செலவிட்டுக் கொள்ள முதல்வர் அனுமதி வழங்கியுள்ளார்" என்று அறிவித்தார்.**

தமிழ்நாட்டில் மொத்தம் 234 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. தமிழக சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுக்கு ஒவ்வொரு வருடமும் 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து தமிழக அரசு வழங்கி வருகிறது.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை உயர்த்தி வழங்க வேண்டும் என பல சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டப்பேரவையில் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றனர்.



சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கையை ஏற்று, சட்டமன்ற உறுப்பினர் தொகுதிக்காக வழங்கப்படும் ரூ.3 கோடி நிதியை சட்டமன்ற உறுப்பினர்களே பயன்படுத்திக்கொள்ள முதலமைச்சர் அனுமதி வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவ செலவிற்கான பணத்தை வழங்குவது குறித்து ஆய்வு செய்து தெரிவிப்பதாக முதலமைச்சர் கூறியுள்ளதாகவும், அதேபோல், சட்டமன்ற உறுப்பினர்கள் திட்டம் செயல்படுத்துவதற்கான ஜி.எஸ்.டி.யையும் நீக்குவதற்கு முதலமைச்சர் ஒப்புக் கொண்டதாகவும் அமைச்சர் துரை முருகன் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் அவை முன்னர் துரை முருகன் அவர்கள் குறிப்பிட்ட தாவது :-

சட்டமன்றத்தைக் குறித்து இந்த அவையில் ஒரு வாதம் வந்தது. வழக்கமாக ஆளுங்கட்சியில் இருந்து, அதுவேண்டும், இதுவேண்டுமென்று கேட்கமாட்டார்கள். எதிர்க்கட்சியில் இருந்து தான் அதிகமாக கேட்பார்கள். தோழமைக் கட்சிகளும் கொஞ்சம் அடக்கி வாசித்துவிட்டார்கள். உறுப்பினர்கள் சிலபேர் சொன்ன கருத்துக்களை நான் முதல்வர் அவர்களிடத்தில் தெரிவித்தேன். இப்போது மூன்று கோடி ரூபாய் எம்.எல்.ஏ.க்களுக்கு fund தரப்படுகிறது. அதில் இரண்டு கோடி ரூபாய் அவர்கள் சொல்கிற வேலைக்கு கொடுக்கவேண்டும். ஒரு கோடி ரூபாய் நாம் சொல்கிற வேலைக்கு கொடுக்கவேண்டும் என்று இருப்பது. அது கொடுத்தும் பிரயோஜனம் இல்லை. கைகட்டியதை போல் இருக்கிறது. எனவே உறுப்பினர்கள் மூன்று கோடி ரூபாயையும் அவர்களுடைய இஷ்டத்திற்கு செலவு செய்வதற்கு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்தேன். முதல்வர் அவர்கள் அதற்கு ஒத்துக்கொண்டார்கள். எனவே, எம்.எல்.ஏ.க்கள் இனிமேல் மூன்று கோடி ரூபாயை நீங்களே செலவு செய்யலாம். நீங்கள் என்றால் உங்களுக்கு இல்லை, தொகுதிக்குத்தான். (சிரிப்பு) அது ஒன்று. அடுத்து சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர்களுக்கு கொஞ்சம் அந்த Healthக்கு பணம் தேவைப்படுகிறது என்று தெரிவித்து இருக்கிறேன். முதல்வர் அவர்கள் அதுகுறித்துப் பேசிவிட்டு, தெரிவிப்பதாகப் தெரிவித்திருக்கிறார்கள் என்ற செய்தியை உங்களுக்கு தெரிவித்து, இன்றும் நேரம் அதிகமாகிவிட்டது. உறுப்பினர் சக்கரபாணி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள், GST இருக்கிறது கிட்டத்தட்ட 50 இலட்சம், 60 இலட்சம் போய்விடுகிறது என்று சொன்னேன். அதையும் எடுத்துவிடுவதாக தெரிவித்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

---

ஜெயா தொலைக்காட்சி ஒளிப்பதிவாளர்

## த.அமல்ராஜ் மருத்துவ சிகிச்சைக்கு ரூ.2 இலட்சம் நிதியுதவி!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜூன் 28 -

ஜெயா தொலைக்காட்சியில் மூத்த ஒளிப்பதிவாளராகப் பணியாற்றிவரும் த.அமல்ராஜ் தற்பொழுது நோய்வாய்ப்பட்டு, தனியார் மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டு வந்த நிலையில், தொடர்ந்து மருத்துவ சிகிச்சைகளை மேற்கொள்ள போதிய பண வசதி இ,ல்லாத நிலையில், அவருக்கு அரசு மருத்துவமனையில் தரமான சிகிச்சை மேற்கொள்ளவும், தனியார் மருத்துவமனையில் மேற்கொண்ட சிகிச்சை கட்டணம் செலுத்திட கூடுதல் நிதியுதவி வழங்கிடுமாறு அனைத்து பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மூலம் நேற்று முன்தினம் (26.6.2024) முற்பகல் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு வரப்பெற்றது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனியார் மருத்துவமனையில் சிசிச்சை பெற்றுவரும் த. அமல்ராஜை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனைக்கு மாற்றி தரமான சிகிச்சை அளிக்கவும், அவர் கோரியுள்ள கூடுதல் நிதியுதவியாக ரூ.2 இலட்சத்தினை உடனடியாக வழங்கிட உத்தரவிட்டார்.

மேலும், முதலமைச்சர் அவர்களின் உத்தரவினைத் தொடர்ந்து த. அமல்ராஜை உடனடியாக ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் சேர்த்து அவருக்கு தரமான சிசிச்சைகளை வழங்கிடவும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், த.அமல்ராஜ் தனியார் மருத்துவமனையில் மேற்கொண்ட சிகிச்சைக்கான கட்டணத் தொகையை செலுத்திட ஏதுவாக தமிழ்நாடு அரசின் பத்திரிகையாளர் நல நிதியத்திலிருந்து ரூ. 2 இலட்சத்திற்கான காசோலை அவரின்குடும்பத்தினரிடம் நேற்று முன்தினம் (26.6.2024) பிற்பகல் வழங்கப்பட்டது.

பத்திரிகையாளர் நலன்களை பேணிக்காப்பதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் த.அமல்ராஜ் உடல் நலக் குறைவு குறித்து தகவல் பெறப்பட்ட ஒரு சில மணித்துளிகளில் இந்த நிதியுதவினையும், அரசு மருத்துவமனையில் சிகிச்சையும் வழங்கிட உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். காசோலையினைப் பெறுக் கொண்ட த.அமல்ராஜ் குடும்பத்தினர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தங்கள் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

மேலும், தங்களது கோரிக்கையினை ஏற்று உடனடியாக நடவடிக்கை மேற்கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களும் தங்களது நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

---

அமைச்சர் க.பொன்முடி- டாக்டர் பொன்.கௌதமசிகாமணி ஆகியோர் முன்னிலையில்

## தே.மு.தி.க., பா.ஜ.க.வினர் 500 க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர்!

*விழுப்புரம், ஜூன் 28 -*

*தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மக்கள் பணியால் ஈர்க்கப்பட்டு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க பொன்முடி மற்றும் மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி ஆகியோர் முன்னிலையில் விக்கிரவாண்டி தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் விக்கிரவாண்டி தொகுதி , விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம் ஆவுடையார் பட்டு தே.மு.தி.க. வழக்கறிஞர் பிரிவு , வழக்கறிஞர் பாலச்சந்திரன் தலைமையில் பா.ஜ.க. விவசாய அணி பாஸ்கரன் , வாசுகி, முத்து, லட்சுமி, காஞ்சனா, நாமம்மாள், பிரபாவதி , விஜயலட்சுமி, முத்துவல்லி, முனியம்மாள் , சுபஸ்ரீ, சுந்தரவல்லி, புஷ்பா, தமிழ்ச்செல்வி, மாலா , லாவண்யா , தமிழ், வள்ளி, சுமதி, முத்து லட்சுமி, ஜெயந்தி, பழனியம்மாள், விந்தியா, மேகலா, வச்சலா, ரூபிணி, அகிலி, மோகனா, சித்ரா , ஆனந்தநாயகி, முத்தம் மாள், ரேவதி, அபிராமி , வசந்தி, செல்வகுமாரி , தமிழரசி,' மல்லிகா, பச்சையம்மாள், தமிழ் , உமாபதி,' விஜயா , ராணி , மரகதம் , தேன்மொழி , மங்களலட்சுமி , கஸ்தூரி, ராசு , பூபதி, ராதிகா,' வீரம்மாள், தேவநாயகி, வசந்தி, ராஜமதி, திலகவதி, அம்பிகா, புனிதா, செல்வி, லட்சுமி, சுசிலா, அங்கம்மாள்,*

*பொற்கலை, முனியம்மாள் , ராணி , பார்வதி,' முத்துலட்சுமி, இன்பவள்ளி , அமிர்தவல்லி, காஞ்சனா , கல்யாணி , ஜெகதீஸ்வரி, கன்னி அம்மாள், அலங்காரம் , வசந்தா, நல்லம்மாள் , செல்லம்மாள், மனோரமா, முத்தமிழ், பூங்காவனம், மதுரை, அம்மாள், கலியம்மாள், தேவகி, இந்திரா , ஆனந்தாய் , விஜயா, அருணா, அஞ்சலட்சுமி , பிருந்தா,' கவிதா , நாகராணி, லட்சுமி , செல்லம்மாள் , தேவி , ராக்கம்மா, அம்மச்சி , வாசுகி,' வனிதா , ஜெயந்தி, ஜெகதீஸ்வரி, விஜயா , ஐஸ்வர்யா , இருசம்மாள், சினேகா, சுகந்தி, வெண்ணிலா, , லட்சுமி, தேவகி, ஜோதி , பழனியம்மாள், குமாரி, முனியம்மாள் , நாகம்மாள், லட்சுமி ,'பொய்யாது, நவநீதம் , வள்ளி , அம்பிகா, தேவி, லதா, செல்வராணி, சுந்தரி , ஆனந்தாயி, ஆதிலட்சுமி, மணிமேகலை,*

*பாப்பா , தனம் , கலையரசி, வைதேகி, முத்தம்மாள், ஏக வள்ளி , உஷா, ரோகினி , கல்யாணி, பார்வதி, சரிதா, சாந்தா,' மீனா, லட்சுமி, செல்வி , சுகுணா , ஆராய் , விஜயா, நாமத்தால் , அமராவதி , சரிதா, செல்வி, மஞ்சுளா , எல்லம்மாள் ,'உமா, சுமித்ரா, சந்திரா, வள்ளி , சுபி,' ரம்யா, சொக்கம்மாள், செந்தமிழ் செல்வி , லட்சுமி, அமுதா , அன்புமணி , சத்தியமூர்த்தி, பிரசன்னா, வெங்கடேஷ், புஷ்பராஜ், , தீபக்ராஜ், இன்பராணி , பாபு , பூவரசன், கலைமணி, பிரபு , வெங்கடேஷ் , முருகன், விஜய் , தாமோதரன்,' அசோக் ராஜ் , சுந்தர் , பிரசாத் , அனுஷா, வசந்தி, கோமதி, செல்வி,' சிவகாமி , கலையரசன், நிரோஷா இவர்களுடன் 500க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர். மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன் , மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், பேரூர் செயலாளர் நைனா முகமது, பேரூராட்சி மன்றத் தலைவர் அப்துல் சலாம், நகரச் செயலாளர் இரா.சக்கரை, விவசாய அணி பாபு ஜீவானந்தம் , இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன்,*

*துணை அமைப்பாளர்கள் எஸ்.பாலாஜி, எஸ். அன்பு, ப.கலைவாணன், பொருளாளர் என்.என். இளங்கோ, வர்த்தக அணி அமைப்பாளர் கோல்டு வெங்கடேசன், தொழிலாளர் அணி கேபிள் சுரேஷ் பாபு, தகவல் தொழில் நுட்ப அணி ப.அன்பரசு, ஆவுடையார்பட்டு நிர்வாகிகள் கிளைச் செயலாளர்கள் பிரபு , நாவப்பன் , குணசேகர்,' ஊராட்சி மன்றத் தலைவர் செல்வி உதயகுமார்,' துணைத்தலைவர் புஷ்பராஜ் , முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் தேவகி கோபால் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.*

---

சாதிவாரிக் கணக்கெடுப்பிற்கு - பேரவையில்

## தனித் தீர்மானம் கொண்டு வந்த முதல்வருக்கு நன்றி!

### முக்குலத்தோர் புலிப்படைத் தலைவர் சே.கருணாஸ் பாராட்டு!

*சென்னை, ஜூன் 28-*

*"சாதிவாரிக் கணக்கெடுப்பிற்கு பேரவையில் தனித் தீர்மானம் கொண்டு வந்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு முக்குலத்தோர் புலிப்படைத் தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான சே.கருணாஸ் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.*

*இகுதுறித்து முக்குலத்தோர் புலிப்படைக் கட்சி தலைவர் சே.கருணாஸ் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :*

*சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தினால்தான் உண்மையான சமூக நீதி காக்கப்படும் என்று கடந்த 06.04.2024 அன்று விரிவான அறிக்கையை வெளியிட்டேன். அதுமட்டுமின்றி சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தி அதன் அடிப்படையிலேயே இடஒதுக்கீடு வழங்க வேண்டுமென்று நான் (சே.கருணாஸ்) 2016 சட்டமன்ற உறுப்பினராக பதவியேற்று 2021 வரை சட்டமன்ற அவையில் வலியுறுத்தி வந்துள்ளேன். நான் மட்டுமல்ல பல்வேறு அரசியல் கட்சி தலைவர்களும். பொது அரசியல் நோக்கர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர் என்பது குறிப்பி டத்தக்கது. ஆகவே அனைவரின் ஒருமித்தக் கருத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஏற்று 26.06.2024 அன்று சாதிவாரிக் கணக்கெடுப்புக் குறித்த தனித் தீர்மானத்தை கொண்டு வந்துள்ளார். முக்குலத்தோர் புலிப்படை கட்சி*



*யின் சார்பில் என் நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

**சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்பு!**

*சாதிவாரியாக மக்கள் தொகைக் கணக்கெடுப்பு செய்யப்பட்டால்தான் இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கும், பட்டியலினப் பிரிவினருக்கும் அவர்களது மக்கள் தொகைக்கு ஏற்ப இடஒதுக்கீட்டை உயர்த்தி வழங்குவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று சென்னை உயர்நீதி மன்றம் மேற்சொன்ன தீர்ப்புகளில் சுட்டிக்காட்டியுள்ளது.*

*இந்நிலையில் சாதிவாரியான கணக்கெடுப்பை நடத்த இதுவே சரியான தருணமாகும். இட ஒதுக்கீடு தொடர்பான பல வழக்குகளில் எந்த புள்ளிவிவரத்தின் அடிப்படையில் இந்த ஒதுக்கீடு தரப்படுகிறது. என்று நீதிமன்றங்கள் கேள்வி எழுப்பப்படும்போது சாதிவாரி கணக்கெடுப்பு என்பது அவசியமாகிறது.*

*சுதந்திர இந்தியாவின் முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்ட போது, சாதி தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்படவில்லை. பட்டியலினத்தினர், பழங்குடியினர் சாதி தொடர்பான தகவ மட்டுமே சேசுரிக்கப்பட்டது.*

**நீதிமன்றம் மறுத்து வருகிறது!**

*அப்போதிலிருந்து இந்திய அரசு ஒரு கொள்கை முடிவாக சாதி வாரி கணக்கெடுப்பை தவிர்த்து வருகிறது. 1948ஆம் ஆண்டின் சட்டத்தில், பொதுவாக சாதி தொடர்பான தகவல்களைச் சேகரிக்கும் விதிமுறைகள் ஏதும் கிடையாது. ஆசுவே, இது தொடர்பாக தொடரப்படும் வழக்குகளில், இந்தச் சட்டத்தை மேற்கோள் காட்டி, சாதி தொடர்பான மக்கள் தொகை கணக்கெடுப்பிற்கு உத்தரவிட நீதிமன்றம் மறுத்தும் வருகிறது.*

*அதேபோல, இட ஒதுக்கிட்டினால் ஒரு சில சமூகங்களே அதிகம் பலன் பெறுகிறார்கள் என்ற குற்றச்சாட்டும் இருக்கிறது. அதை நிரூபிக்கவும் சாதி சார்ந்த புள்ளிவிவரங்கள் தேவை.*

*சாதிக் கணக்கெடுப்பில் இருந்து வெளிவரும் புள்ளிவ ரங்கள் மூலம், யாருக்கு என்ன எண்ணிக்கை உள்ளது மற்றும் சமூகத்தின் வளங்களில் யாருக்கு என்ன பங்கு உள்ளது என்ற உண்மைகள் வெளிவரும். இட ஒதுக்கீட்டு அளிப்பதில் ஒரு தெளிவு கிடைக்கும். அந்த வகையில் மத்திய அரசிற்கு ஓர் அழுத்தம் கொடுக்கும் வகையில் தமிழக முதல்வர்கள் இன்று தனித்தீர்மானித்தை கொண்டு வந்துள்ளார்.*

**அரசு ஏற்றுள்ளது!**

*மேலும், ஒரு சாதிக்கு தனியாக இட ஒதுக்கீடு கொடுக்கும்போது, இன்னொரு சாதியினர் தங்களுக்கும் இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும் எனக் கோருகின்றனர். அவர்களுக்கு எத்தனை சதவிதம் கொடுப்பது என்று அரசினால் முடிவெடுக்க முடியாது. ஏனென்றால் அரசிடம் சாதி தொடர்பாக எந்தப் புள்ளிவிவரமும் கிடையாது. இதனால், எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாமல் இருக்கிறது. அதனால் நாங்கள் சாதி வாரி கணக்கெடுப்பை நடத்தவேண்டும் என கோருகிறோம்! அதை அரசு இன்று ஏற்றுள்ளது*

*சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பை நடத்தும் போது அனைத்து சமூகங்களின் கோரிக்கைகளை ஏற்று, சமூக நீதியை நிலை நிறுத்த முடியும், அனைத்து சமூக மக்களும் சம உரிமை பெற சாதி வாரி கணக்கெடுப்பு என்பது முக்கிய மானது. அதன் அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்குவதே சமூகநீதியாகும். அந்த சமூகநீதியை காக்க இன்று தனித்தீர்மானம் கொண்டு வந்திருக்கிற தமிழக முதல்வர் அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு சே.கருணாஸ் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.*